அமெரிக்கத் தூதரகம் கொழும்பு
இளைஞர் மன்ற தலைமைத்துவ உச்சி மாநாட்டில்
தூதுவர் ஜுலீ ஜே. சங் அவர்கள் தெரிவித்த கருத்துக்கள்
திங்கட்கிழமை, பிப்ரவரி 13, 2023

வணக்கம். ஆயுபோவன். அஸ்ஸலாம் அலைக்கும். இலங்கையின் கௌரவ ஜனாதிபதி, ரணில் விக்கிரமசிங்க, யாழ்ப்பாணம், கண்டி, மாத்தறை மற்றும் கொழும்பிலிருந்து வருகை தந்திருக்கும் இளைஞர் மன்ற உறுப்பினர்கள், American Corner ஒருங்கிணைப்பாளர்கள், மற்றும் எனது தூதரக சகாக்கள் உட்பட உங்களனைவருக்கும் இனிய காலை வணக்கம்.

மீண்டுமொருமுறை அமெரிக்கத் தூதரகத்திற்கும் மற்றும் அமெரிக்க மையத்திற்கும் கௌரவ ஜனாதிபதி விக்கிரமசிங்க அவர்களை வரவேற்கிறோம். இளைஞர் மன்ற உறுப்பினர்களே, உங்களது தலைமைத்துவ மாநாட்டிற்கு உங்களை வரவேற்கிறோம்.

அடுத்த சில நாட்களில், உங்களைப் பற்றி நீங்கள் இன்னும் புரிந்து கொள்வதற்கும், உங்களின் சக இளைஞர் மன்ற உறுப்பினர்களைப் பற்றி மேலும் அறிந்து கொள்வதற்கும் உங்களுக்கு ஒரு சந்தர்ப்பம் கிடைக்கும் அத்துடன் தலைவர்களாக எதிர்காலத்தை கருத்திற்கொண்டு நீங்கள் பிரதிநிதித்துவப்படுத்தும் American Corner சமூகங்களுக்குள் எவ்வகையான நிகழ்ச்சித் திட்டங்களை நீங்கள் உருவாக்க விரும்புகிறீர்கள் என்பதை தீர்மானிக்கும்படி கேட்கப்படுவீர்கள். உங்களனைவருடனும் இங்கு இருப்பதில் நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்!

நீங்கள் இலங்கையின் எப்பாகத்தைச் சேர்ந்தவராக இருந்தாலும், உங்களது சந்ததியினர் ஒரு செழிப்பான, ஜனநாயக நாடொன்றை விரும்புவதை நாங்கள் அறிவோம். உயர்கல்விக்கான ஏராளமான வாய்ப்புகள், புத்துணர்ச்சியூட்டும் மற்றும் உற்சாகமளிக்கும் தொழில்களில் சமமான வாய்ப்புகள் மற்றும் இலங்கையின் மக்கள் மற்றும் பல்வேறு கலாச்சார மரபுரிமை ஆகியவற்றின் அழகை பிரதிபலிக்கும் ஒருங்கிணைக்கப்பட்ட, அமைதியான சமூகத்தைக் கொண்ட ஒரு நாடு. எனது விருப்பமும் அதுவே! தற்போதைய பொருளாதார நெருக்கடியில் இருந்து இலங்கையை மீட்டெடுக்கவும், மேம்பட்ட நிதியியல் ஸ்திரத்தன்மை மற்றும் நல்லிணக்கம் ஆகியவற்றை நோக்கி நாட்டை நகர்த்தவும் அமுல்படுத்தப்படவிருக்கும் சீர்திருத்தங்கள் மற்றும் நடவடிக்கைகள் குறித்து கடந்த வாரத்தில்தான் கௌரவ ஜனாதிபதி விக்கிரமசிங்க அவர்கள் எடுத்துரைத்தார். ஜனாதிபதி அவர்களே, தேசத்தின் மீட்சிக்கு உதவிசெய்வதற்காக இலங்கையர்கள் அனைவரையும் ஜனநாயக ரீதியாக ஒன்றிணைந்து முன்னோக்கிச் செல்லுமாறு நீங்கள் அழைப்பு விடுத்தீர்கள். தமது நாட்டை முன்னோக்கி கொண்டு செல்வதற்கான இலங்கை மக்களின் விருப்பங்களை நாங்கள் ஆதரிக்கிறோம். திரு ஜனாதிபதி அவர்களே, கடந்த 75 வருடங்களாக எமது இருதரப்பு உறவில், ஒரு சிறந்த உலகத்தை கட்டியெழுப்பும் எமது கூட்டு முயற்சிகளில் இலங்கையின் ஒரு பெருமைமிக்க பங்குதாரராக அமெரிக்கா இருந்து வருகின்றது. இலங்கைக்கான தமது கனவுகளைப் பற்றி எழுதிய அனைத்து இலங்கை இளைஞர்களதும் குரல்களின் முக்கியத்துவத்ததை உங்களது கருத்துரையில் நீங்கள் முன்னிலைப்படுத்திக் கூறினீர்கள். இலங்கையின் எதிர்காலத்திற்கு பங்களிப்புச் செய்யும் சிறந்த எண்ணங்களைக் கொண்ட இளம் தலைவர்களால் இன்று இந்த அறை நிறைந்திருக்கிறது. இலங்கையின் முழுமையான பன்முகத்தன்மையினைப் பிரதிநிதித்துவப்படுத்தும் இந்த இளைஞர்களின் தலைமைத்துவப் பயணத்தில் அவர்களுக்கு உதவிசெய்வதில் நாங்கள் மிகவும் பெருமையடைகிறோம். எனவே, உங்களது குரல் முக்கியமானது என்பதையும், உங்களைச் சுற்றி அனைவரையும் உள்ளடக்கிய ஒரு உலகத்தைக் கட்டியெழுப்புவதில் வெற்றியடைவதற்கு உங்களது ஆழ்ந்த ஈடுபாடும்

அர்ப்பணிப்பும் அடித்தளமாக அமையும் என்பதையும் இன்று இங்குள்ள அனைவரும் அறிந்து கொள்ளவும்.

அது "உங்களிடம்" இருந்து ஆரம்பிக்கிறது. உங்களது அயலவர்கள், உங்களது நண்பர்கள், உங்களது பேராசிரியர்கள், உங்களது பெற்றோர்கள், அத்தைகள், மாமாக்கள், மற்றும் உறவினர்கள் ஆகியோரை எப்படி அணுகுகிறீர்கள் என்பதில் ஆரம்பிக்கிறது. நீங்கள் அவர்களுடன் உடன்படும்போது மட்டுமல்ல, நீங்கள் அவர்களுடன் உடன்படாத சந்தர்ப்பங்களிலும். உங்கள் சமூகத்தின் தேவைகளுக்கு நீங்கள் எவ்வாறு பதிலளிக்கிறீர்கள், நீங்கள் ஒருவர் மற்றவரின் வெற்றிகளை எவ்வாறு கொண்டாடுகிறீர்கள் மற்றும் பகிர்ந்துகொள்கிறீர்கள், சந்தர்ப்ப சூழ்நிலைகள் உங்களுக்குச் சாதகமாக அமையாத நேரங்களில் கூட நீங்கள் எவ்வாறு காரியங்களைச் சாதிக்கிறீர்கள் போன்ற விடயங்களில் இருந்து அது ஆரம்பிக்கிறது. ஒரு தலைவராக இருப்பதற்குத் தைரியம் தேவை. உங்கள் சொந்த பாதையை கண்டுபிடிப்பதற்கும் அதில் உண்மையாக இருப்பதற்குமான தைரியம். உங்கள் தலைமைத்துவ திறன்களை வலுப்படுத்துவதற்கான வளங்களாக American Spacesகள் மற்றும் இளைஞர் மன்றங்கள் காணப்படுகின்றன. இவ்வார இறுதியில் இத்தலைமைத்துவ உச்சிமாநாட்டிலிருந்து ஒரு உயர்ந்த குறிக்கோள் உணர்வுடனும் நம்பிக்கையுடனும் நீங்கள் வெளியேறுவீர்கள் என நான் நம்புகிறேன்.

நீங்கள் நம்பினாலும் நம்பாவிட்டாலும் ஒரு காலத்தில் நானே ஒரு கூச்ச சுபாவமுள்ள மாணவியாக இருந்தேன். எனக்கு ஐந்து வயதாக இருக்கும் போது எனது குடும்பம் கொரியாவிலிருந்து அமெரிக்காவிற்கு குடிபெயர்ந்தது. உண்மையில் நான் அந்நியப்பட்டதாக உணர்ந்தேன். எனக்கு 14 வயதாக இருந்தபோது நடைபெற்ற ஒரு சம்பவம் என்னுடைய வாழ்வின் திருப்புமுனையாக அமைந்தது. எனது நடுநிலைப் பள்ளி பட்டமளிப்பு விழாவில் பேசும் வாய்ப்பைப் பெறுவதற்காக ஒரு பேச்சு எழுதும் போட்டியில் கலந்துகொள்ள நான் முடிவு செய்தேன். விட்னி ஹூஸ்டனின் "Greatest Love of All" எனும் பாடலை அடிப்படையாகக் கொண்டு நான் எனது உரையை எழுதினேன். உங்களில் சிலருக்கு அந்தப் பாடல் தெரிந்திருக்கலாம். அந்தப்பாடல் பின்வருமாறு கூறுகிறது:

*பிள்ளைகளே எமது எதிர்காலம் என நான் நம்புகிறேன்*
*அவர்களுக்கு நன்றாகக் கற்றுக் கொடுங்கள் மற்றும் வழி நடாத்த அவர்களுக்கு இடம் கொடுங்கள்*
*அவர்கள் தம்முள்ளே வைத்திருக்கும் அனைத்து அழகையும் அவர்களுக்குக் காட்டுங்கள்*
*அதை எளிதாக்குவதற்காக ஒரு பெருமை உணர்வை அவர்களுக்குக் கொடுங்கள்*
*நாம் எவ்வாறு இருந்தோம் என்பதை பிள்ளைகளின் சிரிப்பு எமக்கு நினைவூட்டட்டும்*

ஏனெனில், பெரியவர்கள் என் தலைமுறையின் பேச்சைக் கேட்டு, உலகில் மாற்றத்தை ஏற்படுத்தும் திறன் எங்களிடம் உள்ளது என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும் என்று நான் விரும்பினேன். அந்த பேச்சுப் போட்டியில் வெற்றி பெற்று எனது பட்டமளிப்பு விழாவில் நான் உரையாற்றினேன். எனது சொந்த தலைமைத்துவப் பயணத்தை மேற்கொள்வதற்கு எனக்கு உதவிய ஆரம்ப வெற்றி அதுவே!

ஒரு தலைவராக மாறுவதென்பது, நிறைய ஏற்ற இறக்கங்களைக் கொண்ட ஒரு பயணம் என்பது உங்களுக்குத் தெரியும். இந்த உச்சிமாநாட்டின் ஊடாகவும், இளைஞர் மன்றத்தின் ஊடாகவும், உங்களது சொந்த பயணப்பாதையையும் உங்கள் சொந்த எதிர்காலத்தையும் வடிவமைப்பதற்குத் தேவையான கருவிகளை உங்களுக்கு வழங்குவதற்கு நாம் முயற்சி செய்கிறோம். ஒரு சமூகமான

பயணத்திற்கான உத்தரவாதத்தினை வழங்கவே நான் விரும்புகிறேன், எனினும் உண்மை என்னவென்றால், நீங்கள் சில சமயங்களில் துன்பங்களை அல்லது கடினமான சவால்களை வாழ்க்கையில் எதிர்கொள்வீர்கள், எனினும் உங்களிடம் அறிவின் ஒரு நல்ல அத்திவாரம், உதவிசெய்வதற்கான ஒரு உறுதியான அமைப்பு என்பன காணப்பட்டு, நீங்கள் நேர்மை, ஆர்வம் ஆகியவற்றைப் பேணி ஒரு நோக்கத்தை விருத்திசெய்து கொண்டால், ஒரு தலைவராக நீங்கள் வெற்றியடைவது நிச்சயம். இங்கு பல்வேறு விடயங்களை சமர்ப்பிப்பவர்களிடமிருந்தும் ஒருவர் மற்றவரிடமிருந்தும் நீங்கள் கற்றுக்கொள்வதற்கு இவ்வாரத்தைப் பயன்படுத்திக் கொள்வதற்கும், ஒருவருக்கொருவர் உதவி செய்வதற்கும் உங்கள் கனவுகளைத் தொடர்வதற்கும் தயாரான நிலையில் இங்கிருந்து வெளியேறுவதற்கும் உங்களை நான் ஊக்குவிக்கிறேன்.

ஏனென்றால், இந்த அமெரிக்க மத்திய நிலையம் போன்ற மற்றும் இலங்கையிலுள்ள American Corners ஆகியவற்றைப் போன்ற American Spacesகள் அனைத்தும் அதையே செய்கின்றன: அதுவே எங்கள் கனவு. சுதந்திரத்தின் 75ஆவது ஆண்டு நிறைவினையும், இலங்கையுடனான எமது இருதரப்பு உறவுகளின் 75ஆவது ஆண்டினையும் குறிக்கும் இவ்வருடத்திலும், இளம் தலைவர்களுக்கு ஒன்று கூடுவதற்கும் கனவு காண்பதற்கும் ஒரு இடத்தை எப்போதும் போலவே இப்போதும் அமெரிக்கா வழங்கியிருக்கிறது. எங்களது American Spacesகள் இதற்கென வடிவமைக்கப்பட்டுள்ளன. இங்கு கருத்துச் சுதந்திரம் கொண்டாடப்படுகிறது, தகவல்களை இலவசமாக அணுகக்கூடிய நிலை காணப்படுவதுடன் ஒன்றுகூடுவதற்கான சுதந்திரம் ஆதரிக்கப்படுகிறது. இப்போது, உங்கள் ஒவ்வொருவருக்கும் நன்றி. இளைஞர்கள் அவர்களது அனைவரையும் உள்ளடக்கிய தலைமைத்துவத் திறன்களை வலுப்படுத்துவதற்கும், தமது சமூகங்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான தீர்வுகளை உருவாக்குவதற்கும் ஆதரவளிக்கும் இளைஞர் மன்றங்களுக்காக எமது American Spacesகள் நன்கு அறியப்பட்டவையாகும்.

கொழும்பிற்கு வருகைதந்தமைக்கு நன்றி. இளைஞர் மன்றத்திற்காக உங்களது நேரத்தை ஒதுக்கியமைக்கு நன்றி. தற்போது தனது கருத்துக்களை வழங்குவதற்காக கௌரவ ஜனாதிபதி விக்கிரமசிங்க அவர்களை அழைக்கிறேன்.